செ.வெ.எண்: 826 நாள் 26.12.07



# பத்திரிக்கை செய்தி

## 26.12.2007 நண்பகல் 12.00 மணியளவில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களால் தூத்துக்குடி மாவட்ட விவரச்சுவடி வெளியிடுதல்

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித்துறை, தமிழக அரசின் சார்பாக, இம்மாநில மாவட்டங்களுக்கான விவரச்சுவடிகளை எழுதி வெளியிடும் பணியினை மேற்கொண்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்திற்கான விவரச்சுவடி தயாரிக்கப்பட்டு மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களால், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறையில் வருகிற 26.12.2007, புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் வெளியிடப்படுகிறது.

மாவட்ட விவரச்சுவடிகள், அம்மாவட்டங்களின் வரலாறு, சமூக, பொருளாதார வாழ்க்கை, மற்றும் விவசாய முன்னேற்றம் தொழில் மற்றும் கல்விவளர்ச்சி, வங்கிகளின் செயல்பாடுகள், வாணிகம், உள்ளாட்சியின் வளர்ச்சி, நீதி நிர்வாகம், சட்டம் ஒழுங்கு நிர்வாகம், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், போன்ற விவரங்களை உள்ளடக்கி, ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், திட்ட அலுவலர்கள், நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் ஒரு கலைக்களஞ்சியத்தை ஒத்த மேற்கோள் நூலாக விளங்குகின்றது. விவரச்சுவடிகளின் படலங்கள் மற்றும் பொருளடக்கங்கள், அனைத்து மாநில, மாவட்ட விவரச்சுவடிகள் தயாரிப்பதற்காக நடுவண் அரசு வகுத்து அளித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி தயாரிக்கப்படுகின்றன. தமிழ்நாடு ஆவணக்காப்பகத்திலுள்ள ஆவணங்கள் மத்திய, மாநில அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளிடமிருந்து பெறப்படும் அறிக்கைகள், மாவட்டம் தொடர்பாக வெளிவந்த வெளியீடுகள், ஆராய்ச்சி நூல்கள், சட்டபூர்வமாக அமைக்கப்பெற்ற குழுக்களின் அறிக்கைகள், மாவட்டத்தைப் பற்றிய முனைவர் பட்ட ஆராய்ச்சிக்கட்டுரைகள், மாவட்ட விவரச்சுவடிகள் தயாரிப்பதற்காக கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பங்களிப்புடன் மாவட்டங்களில் நடத்தப்படும் கருத்தரங்கங்களில் படிக்கப்படும் ஆராய்ச்சிக்கட்டுரைகள் மாவட்டத்தில் சுற்றுப்

பயணத்தின் போது சேகரித்த தகவல்கள் போன்றவை மாவட்ட விவரச்சுவடி தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி முதன்மை ஆணையரின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலுடன், பதிப்பாசிரியரின் தலைமையிலான ஆசிரியர் குழு இவ்விவரச்சுவடிகளைத் தயார் செய்து வெளியிட்டு வருகின்றது.

உயர்கல்வித்துறை செயலரைத் தலைவராகவும், வருவாய்த்துறை செயலர், வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் தணிக்கும் ஆணையர், சென்னை பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தலைவர் ஆகியோர்களை உறுப்பினராகவும், தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் முதன்மை ஆணையரை உறுப்பினர்–செயலராகக் கொண்டு இயங்கும் விவரச்சுவடி நெறிப்படுத்தும் குழுவின் ஒப்புதல் பெற்று மாவட்ட விவரச்சுவடிகள் வெளியிடப்படுகின்றன.

பெருமைமிகு திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து 1986ம் ஆண்டு நிர்வாக வசதிகளுக்காகப் பிரித்து உருவாக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டம் விழுமிய வரலாற்றைக் கொண்டதாகும். இம்மாவட்டத்திற்கு நீண்டு வளைந்த, ஆங்காங்கே மீனவர் கிராமங்களை உள்ளடக்கிய, அழகிய கடற்கரையை இயற்கை அளித்துள்ளது. மன்னார் வளைகுடாவின் பவளப் பாறைகள் மற்றும் அழகிய தீவுகள், இயற்கை இம்மாவட்டத்திற்கு வழங்கிய பெரும் வளங்களாகும். இக்கடற்கரை ஓரங்களில் நடைபெற்ற முத்துக்குளியல் உலகப் பிரசித்தி பெற்றதுமின்றி உலக வர்த்தகத்தில் தமிழகத்திற்கு உகந்த இடத்தினைப் பெற்று தந்ததாகும். இம்மாவட்டத்தின் மக்கள் கடுமையாக உழைத்து வாழ்பவர்கள். தூத்துக்குடி என்றால் முத்து நினைவுக்கு வருவது போல உப்பும் நினைவுக்கு வரும். மனித நாகரீகம் தோன்றியது முதல் இம்மாவட்டத்தில் உப்பு தயாரிக்கும் பணி நடந்து வருகின்றது. இம்மாவட்டத்தின் வாழ்க்கை ஓட்டம் என கருதப்படும் தாமிரபரணி ஆறு இங்கு தான் கடலில் கலக்கிறது. உலக நதிக்கரை நாகரீகங்களுக்கு இணையாக இம்மாவட்டத்தில் தாமிரபரணி நதியோரம் அமைந்திருக்கும் ஆதிச்சநல்லூரில் மனித நாகரீகம் வளர்ச்சி அடைந்தமைக்கு அளப்பரிய ஆதாரங்கள் கிட்டியுள்ளன. எனவே ஆதிச்சநல்லூரை நாகரீகத்தின் தொட்டில் என்று அழைத்தால் அது மிகையாகாது.

இந்திய தேசிய இயக்கத்தில், குறிப்பாக சுதந்திரப் போராட்டத்தில் இம்மாவட்டம் பெரும் பங்கு வகித்துள்ளது. தற்சமயம் ஒரு சுற்றுலாத் தலமாக விளங்கும் பாஞ்சாலங்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சிபுரிந்த சுதந்திரபோராட்ட மாபெரும் வீரர் வீரபாண்டிய கட்டபொம்மனும், பல்லாயிரக்கணக்கான வீரர்களும், படைத்தளபதிகளும் தங்களது இன்னுயிர்களை நாட்டுக்காக ஈந்துள்ளனர். வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட கயத்தாறு இடமும் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது.

எட்டயபுரமும் ஒட்டப்பிடாரமும் இந்தியத் திருநாட்டிற்கு முறையே மகாகவி சுப்பிரமணிய பாரதியையும், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரையும் தந்துள்ளன. அவர்கள் தலைமையில் சுதேசி இயக்கம் தமிழ்நாட்டில் வெற்றி பெற்றது. இவர்களின் கைதுக்கும் சிறைக்கொடுமைக்கும் காரணமாக இருந்த அப்போதைய திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) ஆஷ் என்பவரை மணியாச்சி ரயில் நிலையத்தில் சுட்டுக் கொன்று விட்டு தன்னுயிரையும் மாய்த்துக் கொண்டார். அவ்விடம் விடுதலை வீரர் வாஞ்சிநாதனின் பெயருடன் இணைக்கப்பட்டு வாஞ்சி மணியாச்சி என்று அழைக்கப்படுகிறது. உப்பு சத்தியாக்கிரகத்தின் போது ஒரு ஐரோப்பிய உப்பு அதிகாரியைக் கொன்ற குற்றத்திற்காக தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு, பிரிவி கவுன்சில் வரை சென்று போராடி தண்டனை நிலையிலிருந்து விடுபட்ட தூக்கு மேடை ராஜகோபால் என்று அழைக்கப்பட்ட விடுதலை வீரர் இம்மாவட்டத்தைச் சார்ந்தவராவார்.

தேசிய இயக்கத்தைப் போலவே, திராவிடர் இயக்கமும் இம்மாவட்டத்தில் மக்களுக்கு தங்கள் உரிமைகளைப் பெறவும், சமுதாய பொறுப்புக்களை அறிவுறுத்தவும், மூட நம்பிக்கையிலிருந்து மீளவும் அரும் பணியாற்றியுள்ளது.

தாமிரபரணி ஆற்றின் இரு கரைகளிலும் வாழைத் தோட்டங்களும் நெற்பயிர்களும் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. இம்மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற கோவில்களும், பழமையான வரலாற்றுப் புகழ் மிக்க கிறிஸ்துவ ஆலயங்களும், புகழ் மிக்க மசூதிகளும் உள்ளன. திருச்செந்தூரில் உள்ள கடற்கரை கோவில், கழுகு மலையில் உள்ள பாறையில் கலைநயத்துடன் செதுக்கப்பட்ட கோவில், ஸ்ரீவைகுண்டத்தைச்சுற்றி அமைந்துள்ள ஒன்பது புனித ஸ்தலங்கள் என சிறப்புடன் அழைக்கப்படும் நவதிருப்பதி கோவில்கள், கிறிஸ்துவ தேவாலயங்கள், மசூதிகள் எடுத்துக்காட்டாக உள்ளன. இவைகள் இம்மாவட்டத்தின் கலை, பண்பாடு மற்றும்

தேசியங்கள் இம்மாவட்டத்தில் சிறப்பு வாய்ந்தவை ஆகும்.

கலாச்சாரத்தைப் பறைசாற்றுகின்றன. தூத்துக்குடி மாவட்டம் தமிழ்நாட்டின் தெற்கு நுழைவு வாயில் என்று அழைக்கப்படுகிறது. தூத்துக்குடி ஒரு பெரிய தொழில் வளத்தைப் பெற்ற மையமாகும். இந்நகரம் முத்துநகரம் என்று சிறப்புடன் அழைக்கப்பட்டு வருகிறது. நாட்டுப்புறக்கலைகள், நாட்டுப்புறப்பாடல்கள் மற்றும் பல்வேறு விழாக்களுக்கு இம்மாவட்டம் பிரசித்தி பெற்றதாகும். தூத்துக்குடி துறைமுகத்தின் பாரம்பரியத் தொழிலான கப்பல் கட்டும் தொழில் மற்றும் பனைமரத் தோப்புகள் இம்மாவட்டத்தின் தனிச் சிறப்புகளாகும். இவ்வனைத்து சிறப்புகள் மட்டுமின்றி இம்மாவட்டத்தைப் பற்றிய அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய இம்மாவட்ட விவரச்சுவடி ஒரு கலைக்களஞ்சியமாகும்.

பதினேழு படலங்களைக் கொண்ட தூத்துக்குடி மாவட்ட விவரச்சுவடி, இரண்டு தொகுதிகளாக மொத்தம் 1264 பக்கங்களில் வெளியிடப்படுகிறது. இதன் ஒவ்வொரு தொகுதியும் அரசு நிர்ணயித்துள்ள சலுகை விலையில் ரூ.100/- என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்ட விவரச்சுவடிகளின் பிரதிகள், தமிழ்நாடு ஆவணக்காப்பகம், எண்.51, காந்தி இர்வின் சாலை, எழும்பூர், சென்னை-8 மற்றும் அரசு எழுதுபொருள் அச்சகத்துறை ஆணையர் அலுவலக விற்பனைப் பிரிவு, எண்.816, அண்ணாசாலை, சென்னை.2லும் விற்பனைக்கு கிடைக்கும்.

18/12/07

முதன்மை ஆணையருக்காக

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.